# சங்க இலக்கியத்தில் கூறப்படும் மலர்களின் தோற்றமும் சிறப்பும்

49

**கோ.சோபனா**
**வரலாற்றியல் துறை, ஸ்ரீ கன்யகா பரமேஸ்வரி மகளிர் கல்லூரி,**
**பாரிமுனை, சென்னை- 600001.**

தனிமனிதன் தன் கடமைகளைத் தவறாது செய்வது அறமாகும்.பண்டைய தமிழ்ச் சான்றோர்கள் அறத்தை வாழ்க்கை நெறியாகவே போற்றினர்.சமூகத்தின் வாழ்வியல் ஒருங்குநெறியையே, தமிழர் 'அறம்' என்றனர். அறம் என்பதற்கு, மனிதக்குழு தனக்குள் உருவாக்கிக் கொள்ளும் வாழ்வியல் நெறிகள் எனப் பொருள் கொள்ளலாம்.

தமிழர் வாழ்வியலின் மூன்று கோட்பாடுகளாக அமைந்தவை அறம், பொருள், இன்பம் என்பன. இவை மூன்றிலும் அறம் தலைமை உடையது என்பதனை,

**"சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்**

**அறத்துவழிப் படூஉம் தோற்றம் போல" - (புறம், பாடல் எண் :31)** எனக் கோவூர்கிழார் அறத்தின் சிறப்பினை எடுத்துரைக்கிறார்.

தமிழர் தம் வாழ்வின் துறைதோறும் அறத்தை மையமாகக் கொண்டிருந்தனர். இல்லறம், துறவறம், காதலறம், போரறம், அரசியலறம் என அறம் என்பது எல்லாச் செயல்களிலும் நீக்கமற நிறைந்து நின்றது. வாழ்க்கையில் கடைப்பிடிக்கத்தக்க அறங்கள் பல உள்ளன. பற்பல நற்பண்புகளெல்லாம் அறத்தின் பன்முகங்களாகவே எண்ணப்பட்டிருக்கின்றன. ஈகையறம், நட்பறம், வாழ்வியல் அறம் ஆகியவை சங்ககாலப் பாடல்களில் எதிரொலிக்கின்றன.

**சங்க இலக்கியங்களில் அறம்:**

சங்க காலத்திலிருந்து இன்று வரையிலான தமிழிலக்கியங்கள் அறத்தின் மாட்சிமைகளை நன்கு விளக்குகின்றன.

உயிரிரக்கம் என்னும் பண்பே அறத்தின் மையக்கரு.

சங்க இலக்கியங்கள் காதலையும், வீரத்தையும் பாடுபொருளாகக் கொண்டுள்ளன. இருப்பினும் பெரிதும் அறக்கருத்துக்களையும், அவ்விலக்கியங்கள் போற்றுகின்றன. வீரத்திற்கு முதலிடம் கொடுத்தவர்கள் அறக்கருத்துகளையும் மறவாமல் நினைவு கூர்ந்தனர்

**" அறனும் அன்றே ஆக்கமும் தேயும்" (பாடல் எண் 68, ஆசிரியர்பிரான் சாத்தனார் )**

**என்று நற்றிணையும்,**

**"திறவோர் செய்வினை அறவது ஆகும்"(பாடல் எண் 247, ஆசிரியர் சேந்தம்பூதனார்) என்று குறுந்தொகையும்,**

**"அறம்புரி அந்தணர் வழிமொழிந் தொழுகி"**

**என்று பதிற்றுப்பத்தும்.(பாலைக்கௌதமனார், பதிற்றுப்பத்து, பாடல் எண்: 24) i**

**பிறர் நோயுந் தந்நோய் போல் போற்றி அறனறிதல்" (நெய்தல் கலி, நல்லந்துவனார், பாடல் எண் :139)**

**என்று கலித்தொகையும்,**

**அறன் கடைப் படாஅ வாழ்க்கையும்" (பாலை பாடிய பெருங்கடுங்கோ, அகநானூறு,பாடல் எண் : 155)**

**என்று அகநானூறும், அறக்கருத்துக்களை முன்வைக்கின்றன.**

அறநூல்களில் முதலாவதாக அமையும் திருக்குறள் மனித சமுதாயத்தைப் பண்படுத்தத் தேவையான அறக்கருத்துக்களக் கூறியுள்ளது. தனி மனிதனுக்குத் தேவையான அறங்களை வலியுறுத்துகிறது.

**"அறத்தான் வருவதே இன்பம்"**

**(குறள் எண் :39) என்றும்.**

**"அறனிழுக்கா தல்லவை நீக்கி"**

**(குறள் எண்: 384)**

**என்றும்,**

**" அறன் அறிந்த மூத்த அறிவுடையார்"**

**(குறள் எண்: 441) என்றும்,**

**அறன்அறிந்து ஆன்றமைந்த சொல்லான்."**

**குறள் எண்: 635) என்றும்,**

**"அறத்திற்கும், ஆதியாய் நின்றது"**

**(குறள் எண்: 543)**

என்றும் கூறுவதை நோக்க இல்லறம் ஆடம்பரத்தாலோ, பொருள் சேர்க்கையாலோ, இன்னும் பிறவற்றாலோ உயர்ந்திருப்பின் பெருமையில்லை; பழிநீங்கி வாழ்வதலே சிறந்தது என்பதனைக் குறிப்பால் ஆங்காங்கே வள்ளுவர் உணர்த்துவதை அறியலாம். அரசுக்கும் அறமே துணை என்று வலியுறுத்துவதை அறிய முடிகின்றது. மேலும் அறத்தின் மாண்பினையும், அறம் செய்யப்படும் விதத்தையும் உணர்த்துகிறது.

**புறநானூறு போற்றும் அறக்கருத்துகள்**

பதினெண் மேல்கணக்கு நூல்களை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனக் கூறுவார். அவற்றில் எட்டுத்தொகை நூல்களின் வரிசையில் புறநூலாக இடம் பெறுவது புறநானூறு. இதில் பண்டைத் தமிழகத்தின் அரிய வரலாற்றுத் தொகுப்பு, பண்பாட்டுக் களஞ்சியம், இலக்கியக் கருவூலம், இதனுள் தமிழகத்தின் கோநகரங்கள், துறைமுகங்கள், மலைகள், ஆறுகள், கடற்கரைகள், காடுகள் பற்றிய செய்திகளும், புரவலர்கள், புலவர்களைப் போற்றி அவர்களின் அறிவுரைகளைச் செவிமடுத்து ஒழுகிய சிறப்புக்களும், மன்னர் தம் மாண்பு பற்றிய அரிய குறிப்புகளும் போர்த்தினவுற்று அறமுறை பிறழாது போர்புரிந்து மார்பில் வேலேற்ற மைந்துடைக் காளையின் வீரப்பெருமைகளும், மூவேந்தரின் குடிமை முதலான பண்புகளும், குறுநில மன்னர்களின் ஆண்மை, ஈகை, ஒப்புரவு முதலான சால்புகளும், களச்சாவுற்ற தம் மைந்தரின் உடல் கண்டு பெருமிதமெய்திய தாயரின் மறக்குணங்களும் பிறவும் மிகவும் அழகுற எடுத்துணர்த்துகின்றன. மேல் எடுத்துரைக்கப்பட்ட அனைத்திலும் "அறம்" என்ற உணர்வு தோய்ந்து காணப்படுகின்றது.

**உலகம் நிலைபெறக் காரணம் அறமே!**

இவ்வுலகம் இன்றளவும் நிலையாக அமைவதற்குக் காரணங்கள் எவை என்று வேண்டுவோர்க்கு அறம் செய்வோரும், அறச்சிந்தனையுடையோருமே என்பதனை, கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி,

**"உண்டால் அம்ம, இவ்வுலகம்; இந்திரர்;**

**அமிழ்தம் இயைவ தாயினும், இனிதுஎனத்**

**தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்!**

**துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சிப்,**

**புகழ்எனின், உயிருங் கொடுக்குவர், பழியெனின்,உலகுடன் பெறினும், கொள்ளலர், அயர்விலர்;**

**அன்ன மாட்சி அனைய ராகித்,**

**தமக்கென முயலா நோன்தாள்,**

**பிறர்க்கென முயலுநர் உண்மை யானே".**

**(புறநானுறு, பாடல் எண்: 182)**

பெறற்கரிய அமிர்தமே இயைவது ஆயினும் தாமே தனியே உண்பவர்கள் இல்லை. அறம் செய்து வாழும் தன்மையுடைய பெரியோர்கள் இவ்வுலகில் வாழ்வதால் தான் இவ்வுலகம் நிலைந்துள்ளது என்று இப்பாடலில், அறத்தின் சிறப்பு பேசப்படுகிறது..

**செல்வத்துப்பயனே ஈதல்**

ஒரு தேசத்திற்குச் செல்வச் செழிப்பு இன்றியமையாதது. ஆனால், அது

ஒருவரிடம் குவிந்து கிடப்பதால் பயனில்லை. அது பரவலாக்கப்பட வேண்டும். **“செல் வத்துப் பயனே ஈதல்” என்று புறநானூறு (பாடல் எண் :189)** கூறுவதை இவ்வாறுதான் புரிந்து கொள்ள முடியும். நான் மட்டுமே துய்க்க வேண்டும் என வைத்திருப்பவன் அதனை வீணாக்குகிறான். எனவே செல்வத்தைப் பகிர்ந்து துய்க்க வேண்டும். புறநானூற்றின் 163-ஆம் பாடல் இதனையே வலியுறுத்து கிறது.

**“இன்னோர்க்கு என்னாது, என் னொடும் சூழாது வல்லாங்கு வாழ்தும் என்னாது, நீயும் எல்லோர்க்கும் கொடுமதி” ( புறம் பாடல் எண் : 163)**

என்கிறார் புலவர் பெருஞ்சித்திரனார். பகிர்ந்து இன்புறுதல் என்னும் அறத்தைப் புறநானூற்றின் பல பாடல்கள் வலியுறுத்துகின்றது.

**நீரறம் பேணுதல்**

நீரறம் பேணுதல் சங்க காலத்தில்

மக்க ளாலும் மன்னர்களாலும் போற்றப்பட்ட ஒரு பேரறமாக இருந்தது. **புறநானூறு 18ஆம் பாடலில் குடபுலவியனார் கூறுகிறார் :**

**"உணவெனப் படுவது நிலத்தொடு நீரே**
**நீரு நிலனும் புணரி யோரீண்**
**டுடம்பு முயிரும் படைத்திசி னோரே**
**வித்திவா னோக்கும் புன்புலங் கண்ணகன்**
**வைப்பிற் றாயினு நண்ணி யாளும்**
**இறைவன் றாட்குத வாதே யதனால்**
**அடுபோர்ச் செழிய விகழாது வல்லே**
**நிலனெளி மருங்கி னீர்நிலை பெருகத்**
**தட்டோ ரம்ம விவட்டட் டோரே**
**தள்ளா தோரிவட் டள்ளா தோரே. "**

உயிர்களுக்கு உணவு வேண்டும். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத் தோர். உணவு என்பது நிலத்தொடு கூடிய நீரின் ஆக்கம். எனவே, நிலம் குழியான பகுதிகளில் நீர்நிலைகளை உருவாக்க வேண்டும்; பாசன வசதியைப் பெருக்க வேண்டும். இதற்கு முயல்பவரே முயற்சியாளர்; சிறந்த ஆட்சியாளர் என்னும் கருத்தை முன்வைக்கிறார் புலவர்.

**தலையாய அறம்**

உழுதொழிலை மேம்படுத்திக் குடிநலம் காத்தல் ஓர் அரசின் தலையாய அறமாக அன்று உணரப்பட்டது. **புறநானூற்றின் 35-ஆவது பாடலில் புலவர் வெள்ளைக் குடி நாகனார் இதனைத் தெளிவுபடுத்து கிறார்.**

**"பொருபடை தரூஉங் கொற்றமும் உழுபடை**

**ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே;**

**மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்**

**இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்**
**காவலர்ப் பழிக்கும்இக் கண்ணகன் ஞாலம்;**
**அதுநற்கு அறிந்தனை யாயின் நீயும்**
**நொதும லாளர் பொதுமொழி கொள்ளாது**
**பகடு புறந்தருநர் பாரம் ஓம்பிக்**
**குடிபுறம் தருகுவை யாயின்நின்**
**அடிபுறம் தருகுவர் அடங்கா தேரே"**

பகைவர்களை வென்று மன்னர்கள் பெறுகின்ற வெற்றி என்பது,
ஏரினால் நிலத்தில் ஊன்றி, விளைந்த நெல்லின் பயனாகும்.
எனவே, அரசே, எருதுகளின் துணையுடன் பயிர்த்தொழில் புரிந்து
மக்களைக் காக்கும் உழவர் குடிக்கு நீ உதவுவாய் எனில்,
அடங்க மறுக்கும் பகைவரும் அடங்கி வருவர்" என்கிறார்.

**மக்கள் நலனே முதன்மை !**

புறநானூற்றுச் சான்றோரின் அறநோக் கில் மக்கள் மீதான பரிவும், திட்டமிட்டுச் யெல்பட வலியுறுத்துவதும் முதன்மை பெறுகின்றன. **புறம் 184-இல் பிசிராந்தை யார் பாண்டிய மன்னன் அறிவுடை நம்பிக்கு அறிவுரை கூறுகிறார் :**

**"காய்நெல் அறுத்துக் கவளங் கொளினே,**
**மாநிறைவு இல்லதும், பன்நாட்கு ஆகும்;**
**நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,**
**வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்;**
**அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே,**
**கோடி யாத்து, நாடுபெரிது நந்தும்;**
**மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்**
**வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு,**
**பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்,**
**யானை புக்க புலம்போலத்**
**தானும் உண்ணான், உலகமும் கெடுமே."**

காய்நெல் அறுத்துக் கவளமாய் யானைக்கு ஊட்டுவதுபோல் அரசன் திட்டமிட்டுச் செயல்பட வேண்டும். மக்கள்மீது பரிவுகாட்ட வேண்டும். வரம்புக்கு உட்பட்டு வரிவாங்க வேண்டும்.
அறிவார்ந்த கருத்தாளரையே அருகில் வைத்துக் கொள்ள வேண்டும்.
தரமற்ற ஆரவாரக் கூட்டத்தை அணுகவிடக் கூடாது. திட்டமிட்டுச் செயல்பட்டால் கோடி ஆக்கச் செயல்களை மேற்
கொள்ளலாம். நாடும் உயர்வடையும்."
மன்னர்களை அறம் திறம்பாமல் இட்டுச் செல்பவர்களாக அன்றைய புலமைச் சான்றோர்கள் விளங்கினர்.

**மனிதகுலம் ஒன்றே!**

உலகம் ஒன்று, மனிதகுலம் ஒரே குலம்' என்பதுதான் தமிழர் அறநோக்கின் உச்சம் எனலாம், **புறநானூற்றின் 192ஆம் பாடல் கணியன் பூங்குன்றனாரின் சிந்தனை ஆக்கம். உலகம் போற்றும் உயர் எண்ணச் செல்வம் இது!**

யாதும் நம் ஊரே! யாவரும் நம் உறவினரே!
தீதும் நன்மையும் பிறர்தர வருவதில்லை!
வருத்தமும் வருத்தம்தணிதலும் பிறரால் வருவன அல்ல ! சாவும் புதியதன்று!
வாழ்க்கை இனியது என்று மகிழ வேண்டியதும் இல்லை!
வெறுப்புற்று, இது துன்பமானது எனக் கூற வேண்டியதும் இல்லை!
மின்னல் இடியோடு வானம் மழை பொழிகிறது!
மலை முகடுகளில் துளிகளாய் வீழ்ந்து அருவியாகிறது!
தரையில் இறங்கி வளம் பொருந்திய பேராறாய் நடந்து செல்கிறது!
ஆற்றில் அடித்துவரப்பட்ட ஒரு மிதவை
ஆற்று நீரோட்டத்தின் வழியே செல்வது போல, உயிர்களின் வாழ்க்கை
இயற்கையாய் அமைந்த இயங்குநெறிப்படியே செல்லும்!
அறிவாளர்கள் கண்டுரைத்த உண்மைகளால்
இந்தத் தெளிவை நாம் பெற்றோம்.
எனவே,மாட்சிமை மிக்க பெரியவர்களைப் பார்த்து நாம் வியப்பதும் இல்லை!
எளியோரை ஒருபோதும் இகழ்ந்துரைப்பதும் இல்லை! என்னும் உயரிய வாழ்வியல் அறச்சிந்தனைகளை தொகுத்து தருகிறது இப்பாடல்.

**விருந்தோம்பல் பண்பு**

தமிழர் பண்பாட்டில் சிறந்ததாகக் கருதப்படுவது விருந்தோம்பும் பண்பாகும். இப்பண்பினைத் தமிழ் மக்கள் தம் கடமையாகக் கொண்டு வாழ்ந்தனர்.

**"கந்துமுனிந்து உயிர்க்கும்யானையொடு,பணைமுனிந்து,**
**கால்இயற் புரவி ஆலும் ஆங்கண்,**
**மணல்மலி முற்றம் புக்க சான்றோர்**
**உண்ணார் ஆயினும், தன்னொடு சூளுற்று**
**உண்மென இரக்கும் பெரும்பெயர்ச் சாத்தன் ஈண்டோர் இன்சா யலனே ; வேண்டார்**
**எறிபடை மயங்கிய வெருவரு ஞாட்பின்,**
**கள்ளுடைக் கலத்தர் உள்ளூர்க் கூறிய**
**நெடுமொழி மறந்த சிறுபே ராளர்**
**அஞ்சி நீங்கும் காலை,**
**ஏம மாகத் தான்முந் துறுமே." (புறம், பாடல் எண் : 178)**

பாண்டியன் கீரஞ்சாத்தன் பாடலில் ‘பெரும்பெயர்ச் சாத்தன்’ எனக் கூறப்படுகிறான். யானையைக் கட்டிவைக்கும் மரத்தைக் ‘கந்து’ என்றும், குதிரையைக் கட்டிவைக்கும் மரத்தைப் ‘பணை’ என்றும் கூறுவது தமிழ்மரபு. மணல் பரப்பப்பட்டிருக்கும் அவனது வீட்டு முற்றத்தில் யானைகளும் குதிரைகளும் கட்டிக்கிடப்பதை விரும்பாமல் ஆடிக்கொண்டேயிருக்குமாம். அவனது முற்றத்துக்குச் செல்பவர் யாராயிருந்தாலும் ‘பசி இல்லை, வேண்டாம்’ என்று உண்ண மறுத்தால், “என்மீது ஆணை, உண்ணத்தான் வேண்டும்” என்று கெஞ்சுவானாம். அதனால், ‘சாத்தன்’ என்று சொன்னால் இவனைமட்டுமே குறிக்கும்

அளவுக்கு இவன் 'பெரும்பெயர்' பெற்றிருந்தான் என ஆவூர் மூலங்கிழார் என்னும் புலவர் பாண்டியன் கீரஞ்சாத்தனின் பண்பினைப் புலப்படுத்தியுள்ளார்.

**"நெருநை வந்த விருந்திற்கு மற்றுத் தன்**
**இரும்புடைப் பழவாள் வைத்தனன்; இன்றுஇக்**
**கருங்கோட்டுச் சீறியாழ் பணையம்; இதுகொண்டு**
**ஈவது இலாளன் என்னாது, நீயும்;**
**வள்ளி மருங்குல் வயங்குஇழை அணியக்,**
**கள்ளுடைக் கலத்தேம் யாம்மகிழ்தூங்கச்,**
**சென்று வாய் சிவந்துமேல் வருக_**
**சிறுகண் யானை வேந்து விழுமுறவே."**
**(புறம், பாடல் எண் : 316)**

நேற்று அவனைத் தேடி வந்த விருந்தினருக்கு அவன் தன் குடிப்பொருளான பழைய வாளைப் பணயமாக வைத்தான். (போருக்குச் சென்று வென்றுவந்த பொருளை விருந்தினருக்கு வழங்கிவிட்டு வாளை மீட்டுக்கொண்டான்). இன்று நான் என் யாழைப் பணயமாக வைக்கிறேன். அவன் போருக்குச் சென்று வென்றுவந்து வெற்றிச்செல்வத்தை வழங்கிவிட்டு என் யாழை மீட்டுத் தருவான். பாண! உன் மனைவி அவளது கொடி போன்ற இடையில் பொன்னால் இழைத்த அணிகலன்கள் அணிய அவன் வழங்குவான். கள்ளுப் பானையோடு நான் மகிந்து ஆடும்படித் தருவான். உனக்கும் வாய் சிவக்கச் சிவக்க உண்ணும்படி வழங்குவான். நீ அவனிடம் சென்று திரும்புவாயாக. சிறிய கண் கொண்ட யானைமீதுள்ள அவனது பகைவன் விழுமம் கொள்ளட்டும்.

வீரனொருவன் முதல் நாள் வாளைப் பணையம் வைத்து விருந்தளித்த விதத்தினையும் மறுநாள் வந்த விருந்தினரை உபசரிப்பதற்கு யாழைப் பணயம் வைத்த விதத்தினையும் மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார் என்னும் புலவரின் பாடலில் ஒருவனின் விருந்தோம்பல் அறம் போற்றப்படுகிறது.

மனிதன் தன் வாழ்நாள் முழுவதும் அறநெறிகளைப் பின்பற்றி வாழ அறிந்து வைத்திருந்தான். அதன்மூலம் நேரிய வழியில் செல்வத்தை ஈட்டுவதையே தனது குறிக்கோளாகக் கொண்டான். இல்லை என வருபவர்களுக்கு முகமலர்ச்சியுடன் வழங்கக்கூடிய உயரிய குணத்தைப் பெற்றிருந்தான். தன்னால் நன்மை செய்ய இயலாவிட்டாலும் தீமை செய்யாத குணம் உடையவனாகவும் நன்றி மறக்காத பண்பை உடையவனாக விளங்கி வாழ்வில் பல வெற்றிகளையும் சிறப்பினையும் பெற்று இன்புற்று வாழ்ந்த நிலையினைப் புறநானூற்றுப் பாடல்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

**அறச்செயல்**

.நெட்டிமையார் என்னும் புலவர்

.பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடிய புறநானூற்று பாடல் இது. அரசனின் அறத்திற்கு மாறான செய்கையை, குறிப்பால் சுட்டிக் காட்டுகிறார் புலவர்.

**"பாணர் தாமரை மலையவும், புலவர்**
**பூநுதல் யானையோடு புனைதேர் பண்ணவும்,**

**அறனோ மற்றஇது விறல்மாண் குடுமி!**

**இன்னா ஆகப் பிறர் மண் கொண்டு,**

**இனிய செய்தி நின் ஆர்வலர் முகத்தே?"**

**(புறம், பாடல் எண் : 12)**

உன்னைப் பாடும் பாணர்கள் நீ வழங்கும் பொற்றாமரை விருது அணிகலனைத் தலையில் சூடிக்கொள்கின்றனர். புலவர்கள் நீ வழங்கும் யானைமீதும் தேர்மீதும் ஏறிச் செல்கின்றனர். வெற்றியைக் குவிக்கும் 'குடுமி' வேந்தே! பிறர் மண்ணைக் கைப்பற்றும் கொடுமையைச் செய்து அங்குக் கிடைத்த பொருள்களைக் கொண்டு நீ விரும்புபவர்களுக்கு மட்டும் இன்ஃபம் தரும் செயல்களைச் செய்தல் அறச்செயலோ எனக் கேட்பதன் மூலம் எது அறம் என்பதை அரசனுக்கு உணர்த்துகிறார்.

**செய்தி கொன்றவர்க்கு உய்தி இல்லை!**

புறநானூறு செய்நன்றி மறவாமையை போற்றுகின்றது. பசுவினது மடியினை அறுத்த தீவினையாளருக்கும், பெண்டிரது கர்ப்பத்தை அழித்தோருக்கும், அந்தணருக்குத் தவறு செய்த கொடியோருக்கும் தாம் செய்த பாவத்தினைப் போக்குவதற்கு வழி உண்டு என்றும், உலகம் தலைகீழாக மாறும் காலம் தோன்றினும் ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்தோர்க்கு நரகத்தினின்று தப்பமுடியாது என ஆலத்தூர் கிழார் கூறுவதைக் காணமுடிகிறது. இதனை,

**"ஆன்மலை அறுத்த அறனி லோர்க்கும்,**

**மாண்இழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்,**

**குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்,**

**வழுவாய் மருங்கின் கழுவாயும் உள என,**

**நிலம்புடை பெயர்வ தாயினும், ஒருவன்**

**செய்தி கொன்றோர்க்கு உய்தி இல் என**

**அறம் பாடின்றே ஆயிழை கணவ! "**

நன்றி அறிதல் தொடர்பான செய்தியினைப் (**புறநானூறு , பாடல் எண் :34**) சுட்டிக்காட்டுகிறது.

அதாவது, செய்நன்றி மறத்தல் மிகக் கொடிய பாவம் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது. எனவே தான் வள்ளுவப் பெருந்தகை

**"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**

**அன்றே மறப்பது நன்று" (குறள்.108)** எனக்

கூறுவதும் குறிப்பிடத்தக்கது.

**மனமார வாழ்த்தும் வாழ்வியற் அறம்**

நல்லோரை மனமார வாழ்த்தும் பண்பு புலவர்களுக்கு உரித்தானது.

புறநானூற்றில் அதியமான் நெடுமான் அஞ்சியை வாழ்த்தும் செய்திகள் உள்ளன. உதாரணமாக,

**"பால்புரைபிறைநுதல் பொலிந்தசென்னி**

**நீலமணிமிடற்றுஒருவன் போல**

**மன்னுகபெருமநீயே…" (புறம், பாடல் எண்:91)**

என்னும் பாடலடிகளில் ஔவையார் அதியமான் நெடுமான் அஞ்சியை நீ பால் போன்ற பிறைச் சந்திரன் நெற்றி போல விளங்கும் திருமுடியையும் நீலமணி போன்ற கரிய கழுத்தையும் உடைய சிவபெருமானைப் போல நிலைபெற்று வாழ்வாயாக என்றும் கூறுகின்றார். அதாவது சிவபெருமான் விசத்தை உண்ட பிறகும் உயிர்பெற்று நிலைத்து வாழ்ந்தான். அது போல அதியமானும் எந்த விதமான துன்பமும், கரணமும் வராமல் வாழவேண்டும் என்றும் வாழ்த்துகின்றார்.

மேலும், ஔவையார் பாடிய மற்றொரு புறநானூற்றுப் பாடலைக் காண்போம்.

**"நாகத் தன்ன பாகார் மண்டிலம்**

**தமவே யாயினும் தம்மொடு செல்லா;**

**வெற்றோர் ஆயினும் நோற்றோர்க்கு ஒழியும்;**

**ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப்**

**பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து,**

**பாசிழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய**

**நாரறி தேறல் மாந்தி, மகிழ் சிறந்து,**

**இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி,**

**வாழ்தல் வேண்டும், இவண் வரைந்த வைகல்;**

**வாழச் செய்த நல்வினை அல்லது,**

**ஆழுங் காலைப் புணைபிறிது இல்லை;**

**ஒன்று புரிந்து அடங்கிய இருபிறப் பாளர்**

**முத்தீப் புரையக் காண்தக இருந்த**

**கொற்ற வெண்குடக் கொடித்தேர் வேந்திர்;**

**யான் அறி அளவையோ இவ்வே;வானத்து வயங்கித் தோன்றும் மீனினும், இம்மெனப்**

**பரந்து இயங்கும் மாமழை உறையினும்,**

**உயர்ந்து மேந்தோன்றிப் பொலிக, நும் நாளே! " (புறம், பாடல் எண்: 367)**

வானத்து மீன்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் பெருக வேண்டும். 'இம்' என்று பொழியும் மழையில் உள்ள நீர்த்துளிகளின் எண்ணிக்கையைக் காட்டிலும் பெருகவேண்டும். நில உலகினைச் சூழ்ந்துள்ள மண்டிலம் தேவருலகம் போல இனிமையானது. அது ஞாயிறு, திங்கள் இரண்டுக்கும் உரிமையானது. என்றாலும் இந்த இரண்டு சுடர்களும் இணைந்து செல்வதில்லை. நீங்களோ மூவரும் இணைந்து காட்சி தருகிறீர்கள். இந்த உலகம் ஆளும் உங்களுடையதுதான். என்றாலும் அது நோன்பு இயற்றியவர்களுக்கே உரியது. நீங்கள் அந்தணர்களுக்கு வழங்க வேண்டும். ஏந்தி நிற்கும் அவர்களின் கையில் பூவும் பொன்னும் வழங்க வேண்டும். நீர் ஊற்றித் தாரை வார்த்து வழங்க வேண்டும். மகளிர் பொன்-கிண்ணத்தில் தரும் தேறலைப் பருகவேண்டும்.இரவலர்களுக்கும் அரிய அணிகலன்களை வழங்கவேண்டும். தனக்கென வைத்துக்கொள்ளாமல் வழங்கவேண்டும். உங்களுக்கு வழங்கப்பட்ட வாழ்நாள் எல்லாம் வழங்கவேண்டும்.இவ்வாறு வாழ்ந்து உங்கள் வாழ்நாள் பெருகவேண்டும். பிறரை வாழச்செய்வதுதான் நல்வினை. இந்த நல்வினை உங்களை ஏற்றிச் செல்லும் மிதவையாக உதவும். வாழ்க்கைத் துன்பத்தில் மூழ்கும்போது உதவும். இந்த நல்வினை போல வாழ்க்கைக்கு இன்பம் தந்து உதவக்கூடியது வேறு ஒன்றும் இல்லை

என்னும் பாடலடிகளின் மூலம் சேரமான் மாவெண்கோவும், பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதியும், சோழன் இராச்சியம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒன்றாக அமர்ந்து இருந்த போது ஔவையார் இவர்களைப் பார்த்து, வானத்தில் விளங்கும் விண்மீன்களை விடவும், இடியுடன் முழங்கிப் பெய்கின்ற மழைத்துளியை விடவும் மிகுதியான நாட்கள் பெற்று வாழ்க என வாழ்த்துவதை உணரமுடிகிறது. இவ்வாறு வாழ்த்துவதே நீதிக் கோட்பாடாகும்.

**முடிவுரை**

மனிதர் வாழ்ந்த விதத்தை உணர்த்தும் இலக்கியம், வாழவேண்டிய நெறியையும் காட்டவல்லது. புறநானூற்றில் பதிவு செய்யப்பட்டவை வெறும் போர்க்களச் செய்திகள் மட்டும் அல்ல. புறச்சிந்தனையில், அறச்சிந்தனையின் ஆணிவேர் செறிந்திருக்கக்காணலாம் பேரிலக்கியமாக கருதப்படும் புறத்தில் வாழ்வியல் சிந்தனைகள் அறநெறிக்கு அடிப்பயைானவையாக அமைகின்றன.

புறநானூற்றில் அறநெறி உணர்த்தவும், அறிவூட்டிநெறிப்படுத்தவும் சமூகநோக்கில் பல்வேறு புலவர்கள் முயன்றுள்ளனர். சங்ககால மக்கள் மிகவும் நேர்மையாகவும், உன்னத தன்மையுடனும் வாழ்ந்து வந்துள்ளனர். நெறி தவறாமல் வாழ்வதற்கு அறம் முக்கியமானதாகும். மேலும், புறநானூற்றில தமிழர்கள் வளர்த்த நட்பறமும் வாழ்வியல் அறமும் அஞ்சாத அறமும் ஆகியன அறநெறி அடிப்படையிலே இயங்கியுள்ளன என்பதையும் சுட்டிக்காட்டுகின்றன.

**துணைநின்ற நூல்கள்**

1. . அ.ப. பாலையன், புறநானூறு மூலமும் உரையும்,சாரதா பதிப்பகம், சென்னை,2008

2., ந.சுப்பிரமணியன், சங்ககால வாழ்வியல்,

நியூ செஞ்சுரி புக் பவுஸ், சென்னை, இரண்டாம் பதிப்பு 2010,

3.புலவர் அ. மாணிக்கனார், புறநானூறு மூலமும் உரையும், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 1999.

**கட்டுரைகள்**

1.முனைவர் கோ.வசந்திமாலா, புறநானூற்றில் அறம், WWW.Vallami.com , அக்டோபர் 2022.

2. புறநானூற்றில் தமிழர் அறம், WWW.keetru.com, ஏப்ரல் 2020.